©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 40] சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 4, 2017
புரட்டாசி 18, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 149, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 31 ஆகஸ்ட் 2017.]*

**1979–ஆம்** ஆண்டு மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினையும் பணி நிலைமைகளையும் முறைப்படுத்தல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 30/1979) 35–ஆம் பிரிவைச்சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 1983 ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினையும் பணி நிலைமைகளையும் முறைப்படுத்தல்) (தமிழ்நாடு) விதிகளில் செய்யக்கருதியுள்ள கீழ்க்காணும் திருத்தங்களின் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 35–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கோரியுள்ளவாறு, இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் இந்த வரைவுத்திருத்தம் பிரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக யாதொரு நபரிடமிருந்து பெறப்படும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எவையேனுமிருப்பின், அவற்றை, 47/1, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–600 032–இல் உள்ள தொழிலகப்பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் வாயிலாக, தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் (FAC), தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

**வரைவுத் திருத்தங்கள்**

**மேற்சொன்ன விதிகளில்,—**

(1) 3–ஆம் விதியில்,–

(a) துணை விதி (2) இல், ''கருவூலப்பற்றுச்சீட்டு வாயிலாக'', என்ற சொற்றொடருக்குப்பின்னர், ''அல்லது தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக இணைய வழி தொகை செலுத்தலின் பேரில்'', என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்;

(b) (3) ஆம் துணை விதிக்குப்பதிலாக, பின்வரும் துணைவிதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்; அதாவது:—

‘‘(3) துணை விதி (1) இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக அல்லது பதிவு அலுவலருக்கு நேரடியாக அல்லது பதிவு அஞ்சலில் அவருக்கு அனுப்பப்பட வேண்டும்’’;

(2) 7—ஆம் விதியில்,—

(a) (3) ஆம் துணை விதியின், (b) பகுதிக்குப்பதிலாக, பின்வரும் பகுதி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்; அவையாவன:—

(b) “துணை விதி (1) அல்லது துணை விதி (2) இல், குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக அல்லது உரிமம் வழங்கும் அலுவலருக்கு நேரடியாக அல்லது பதிவு அஞ்சலில் அவருக்கு அனுப்பப்பட வேண்டும்’’;

(b) (5) ஆம் துணை விதியில், ‘‘விதி 20 இன்கீழ்’’ என்ற சொற்றொடருக்குப்பின்னர், ‘‘தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக இணைய வழி தொகை செலுத்தலின் பேரில்’’ என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்;

(3) 15ஆம் விதியில், (2) ஆம் துணை விதிக்குப்பின்னர், பின்வரும் துணை விதி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்; அவையாவன:—

‘‘(2A) துணை விதி (2) இல் குறிப்பிடப்பட்ட விண்ணப்பம், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக அல்லது உரிமம் வழங்கும் அலுவலருக்கு நேரடியாக அல்லது பதிவு அஞ்சலில் அவருக்கு அனுப்பப்பட வேண்டும்;

மேலும் அத்தகைய விண்ணப்பத்துடன், கருவூலப்பற்றுச்சீட்டு அல்லது தொழிலகப்பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணைய வழி வலைவாசல் வாயிலாக இணைய வழி தொகை செலுத்துகை முறையில் உரிய கட்டணம் செலுத்தப்பட்டதற்கான ஆதாரம் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

**மங்கத் ராம் ஷர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர் (FAC).*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.